(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) தருமபுரி மாவட்டத்தில் மண்வள ஆய்வு வேலை நடைபெற்று வருகிறது. இப்பணி முடிக்கப்பட்டதும், புன்செய் நில மேம்பாட்டுச் சிறப்புத் திட்டங்கள் தயாரிக்கும் பணியை சிறப்புப் பணியாளர்களிடம் ஒப்படைத்து அவற்றைத் தயாரிக்க வேண்டும்.

Sugarcane Price.

@ 110 *Q.*—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :—

(*a*) whether the North Arcot Co-operative Sugar Factory has demanded higher price for sugarcane during 1972–73 ; and

(*b*) if so, the decision taken thereon by the Government?

கரும்பு விலை.

திரு. எல். பலராமன் : மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) வட ஆற்காடு கூட்டுறவு சர்க்கரை ஆலை, கரும்புக்கு 1972–73ம் ஆண்டுக்கு அதிக விலை கொடுக்க வேண்டுமென கோரியுள்ளதா?

(இ) ஆமெனில், அது குறித்து அரசு எடுத்த முடிவு யாது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, தற்போது கரும்பு உற்பத்தியாளர்களுக்கு சர்க்கரை ஆலையிலிருந்து கிடைக்கக் கூடிய விலை கட்டி வரவில்லை என்ற கோரிக்கை பரவலாக இருந்து வருகிறது. சர்க்கரை ஆலை நிர்வாகிகளும் தலைவர்களும் விவசாயிகளுக்குக் கரும்பு விலையைக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்திற்குக் கோரிக்கை அனுப்பியதாகக் கூறப்படுகிறது. அது வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். இல்லையென்றால், அதுபற்றிப் பரிசீலிக்க அரசு ஆவன செய்யுமா என்று தெரிவிக்கவிரும்புகிறேன்.

@ Postponed from the List of questions for 8th December 1972.

1972 டிசம்பர் 15]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, கரும்பு விலையில் உற்பத்தியாளருக்கு அதிகமாகக் கிடைக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரால் யோசனை சொல்லப்படுகிறது. பல முறை ஒரு உத்தரவு வழங்குங்கள் என்று நாங்கள் எழுதியும் இது வரை பதில் இல்லை. ஆனால், 80 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது இந்த ஆண்டு 85 ரூபாயாக உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ரூபாய் 85 மாத்திரம் அல்லாது அவர்களுக்கு எந்த அளவுக்கு அந்த உற்பத்தித் திறன் இருக்கிறதோ அந்தத் திறன் அடிப்படையிலும் அதற்கு 1 சத விகிதம் கூட்டி அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொடுக்கப்படுகிறது. பல இடங்களில் திறன் அதிகமாகி, இப்பொழுது 85 க்குப் பதிலாக 90, 96, 100 என்று கூட திறன் அடிப்படையில் கொடுக்கப்படுகிறது. அவ்வாறு தகுதி அளவில் திறன் இருந்தாலும் நாம் நிர்ணயித்த விலை 85 ரூபாய்க்குக் குறையக் கூடாது என்று வலியுறுத்திப் பேசப்பட்டு இன்று நடைமுறையில் வருகிறது.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ரெகவரி திறன் என்று கூறுவதுபோல, 9 லிருந்து 10 அளவு என்று வருவதை நாம் இப்பொழுது 80 லிருந்து 100 க்கு உயர்த்தியிருக்கிறோம். அந்தத் திறனுக்கு என்ன விலை என்று அரசு நிர்ணயம் செய்திருக்கிறதா ? அல்லது மத்திய சர்க்கார் நிர்ணயித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 9.4-க்கு மேல் இருந்தால் தான் அதற்கு மேல் திறன் அடிப்படையில் கொடுக்கப்படும்.

திரு. எல். பலராமன்: தலைவர் அவர்களே, திறனுக்கு ஏற்ப என்னென்ன அடிப்படையில் விலை நிர்ணயிக்கப்படுகிறது என்ற விளக்கம் வேண்டும்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தனியாகக் கேள்வி போட்டால், பட்டியல் தெரிவிக்கிறேன்.

Sri Dharmaraja Koil at Saidapet, Madras.

*132 *Q.*—Thiru Y. VENKATESWARA DIKSHIDAR (on behalf of Thiru S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the Government are aware that Sri Dharmaraja Koil at Saidapet, Madras, is in a dilapidated condition ; and

(*b*) if so, the action taken thereon?